## பண்டகசாலைப் பெறுவனவுகள் நிதியளிப்பு செயற்திட்டம் - 2014

பண்டகசாலைப் பெறுவனவுகள் நிதியளிப்பு செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 யூலை 17 ஆந் திகதிய ரீஎவ் 6138 (ரீஎவ் 012186) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II பீ 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் நிறைவேற்றல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

பண்டகசாலைப் பெறுவனவுகள் நிதியளிப்பு செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் அபிவிருத்தி நிதி திணைக்களம் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் முன்னாள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சும் தற்போதைய நிதி அமைச்சும் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பண்டகசாலை பெறுவனவு நிதியளிப்பு நிகழ்ச்சித்திட்ட மின்னியல் அபிவிருத்தி மற்றும் எதிர்விளைவுகள் மூலம் நிதிச் சேவைகளை அணுகுவதற்கு இணைவதனால் விவசாய உற்பத்திக்கான தரமான களஞ்சியப்படுத்தல் மற்றும் அத்தகைய உற்பத்திப் பொருட்களிற்கு வசதியளித்தல் போன்றவற்றை உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்குதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 852.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.5 மில்லினானதுடன் செயற்திட்டத்தின் முழுக்கிரயமும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2012 யூலை 17 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 மே 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப்

பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்குகிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**3. செயற்பாட்டு மற்றும் நிதிச் செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் தொடர்பான சில் முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 6.5 | 852.8 | 400.0 | 216.4 | 1.8 | 237.9 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 3.0 | - | - | |
| | 6.5 | 852.8 | 403.0 | 216.4 | 1.8 | 237.9 |

மேற்குறிப்பிட்ட தகவலின் பிரகாரம், ரூபா 852.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 6.5 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் செயற்பாட்டின் 1 ½ ஆண்டுகளின் முடிவில் ரூபா 237.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, எஞ்சிய 5 மாத காலத்திற்குள் ஐ.அ.டொலர் 4.7 மில்லியன் ஒதுக்கீட்டு மீதியின் பயன்பாட்டு சாத்தியத்தன்மை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளது.

### 3.2. பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது பண்டகசாலைப் பெறுவனவு முறைமையை அமுலாக்குவதற்கு 03 பெரிய பண்டகசாலையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் குருலுவெலவில் பண்டகசாலையின் நிர்மாண சேவைகள் 2015 மே மாதத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் புத்தளை மற்றும் மன்னாரில் பண்டகசாலையின் பௌதீக முன்னெற்றம் 2015 மே 31 உள்ளவாறும் 55 சதவீதம் மற்றும் 20 சதவீதத்தில் மாத்திரம் இருந்தது.

(ஆ) மேலும், செயற்திட்டமானது பெரிய வெங்காய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகளிற்கு அவர்களுடைய பண்டகசாலையை நிர்மாணிப்பதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கியிருந்தது. பெறப்பட்ட தகவலின் பிரகாரம், 370 விவசாயிகள் பெரிய வெங்காய பண்டகசாலையை நிர்மாணிப்பதற்கு செயற்திட்டத்துடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதில் 287 விவசாயிகள் மாத்திரம் 2015 மே 31 இல் உள்ளவாறு அவர்களுடைய பண்டகசாலைகளின் நிர்மாண வேலைகளை பூர்த்தியாக்கியிருந்தனர்.

(இ) செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், விவசாயிகளால் வேண்டப்பட்ட கடன்களிற்காக அத்தாட்சிகளாக வர்த்தக வங்கிகளிற்கு மின்னியல் பற்றுச் சீட்டு வழங்குவதற்கு பண்டகசாலை செயற்பாட்டாளர்களை அனுமதிப்பதற்கு பொறிமுறையொன்றை அபிவிருத்திசெய்வதற்கு பிரேரிக்கப்பட்டிருந்ததுடன்

அவற்றின் மூலம் விவசாயிகளின் அவசர நிதித் தேவைகளை நிரப்புவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு 2014 திசெம்பர் 31 வரையும் பிரேரிக்கப்பட்ட பொறிமுறையை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அம்பாறையில் பண்டகசாலை ஒன்றின் நிர்மாண இடம் பின்னர் புத்தளைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் இந்த தீர்மானத்தின் விளைவால், 2014 நவம்பர் 10 இல் செய்யப்பட்ட ரூபா 29.3 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணம் 2015 சனவரி 26 வரை ஒப்பந்தகாரரின் கையில் இருந்தது.

(ஆ) பெரிய வெங்காய பண்டகசாலையின் நிர்மாணத்திற்காக விவசாயிகளிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் வழங்குதல், பரிசோதனைகள் மற்றும் ஆவணங்கள் தயாரித்தல் போன்ற நோக்கத்திற்காக பிரதேச செயலகங்களிற்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிற்கு ரூபா 660,574 ஆன தொகை செலுத்தப்பட்டது.